செ.வெ.எண்: 07/மே நாள்: 03.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து அனுப்புவதற்கு கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization)

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள், திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (03.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள் (பரமக்குடி, திருவாடானை), திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) மற்றும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து அனுப்புவதற்கு கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization) நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் போட்டியிடுவதற்காக 22.04.2016 முதல் 29.04.2016 வரை வேட்பாளர்களின் வேட்புமனு தாக்கல் நடைபெற்று, வேட்புமனு சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு 02.05.2016 இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி (209) சட்டமன்ற தொகுதியில் 15 வேட்பாளர்களும், திருவாடானை (210) சட்டமன்ற தொகுதியில் 21 வேட்பாளர்களும், இராமநாதபுரம் (211) சட்டமன்ற தொகுதியில் 17 வேட்பாளர்களும், முதுகுளத்தூர் (212) சட்டமன்ற தொகுதியில் 15 வேட்பாளர்களும் ஆக மொத்தம் 68 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

அதனடிப்படையில் சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவிற்காக பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 301 வாக்குச்சாவடி மையங்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் 321 வாக்குச்சாவடி மையங்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 321 வாக்குச்சாவடி மையங்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 364 வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்துவதற்காக போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 346 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 346 கணக்கீட்டு கருவிகளும், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு 738 வாக்குச் செலுத்தும் கருவிகளும், 369 கணக்கீட்டு கருவிகளும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு 738 வாக்குச் செலுத்தும் கருவிகளும், 369 கணக்கீட்டு கருவிகளும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு 418 வாக்குச் செலுத்தும் கருவிகளும், 418 கணக்கீட்டு கருவிகளும் தேவை என கணக்கிடப்பட்டு பாதுகாப்பான முறையில் போதிய இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள் (பரமக்குடி, திருவாடானை), திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) மற்றும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து அனுப்புவதற்கு கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization) நடைபெற்றது. குலுக்கள் முறையில் தெரிவு செய்யப்படும் வரிசை எண் கொண்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிக்கு முழு பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.காமாட்சி கணேசன், சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன் உட்பட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**